## சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி

## S.C. No. 323/2012

**07.11.2025.**

## P.W.9- சாலமோன்ராஜா

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

காயம்பட்டவர் மருத்துவமனை வரும்போது காவல்துறை நமுனா வாங்கி கொண்டு வந்தாரா என்றால் இல்லை. நாங்கள் தான் காவல் நிலையத்திற்கு தகவல் கொடுத்தோம். மேற்படி தகவல் யார் மூலம் காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது என்றால் மருத்துவ பணியாளர்கள் தெரிவித்தார்கள். நான் பணியில் இருக்கும்போது போலீசார் காயம்பட்டவரிடம் வாக்குமூலம் பெற்றார்களா என்றால் இல்லை. காயம்பட்டவருக்கு நான் எந்த சிகிச்சையளித்தேன் என்று காவல்துறையிடம் ஆவணங்கள் கொடுத்தேனா என்றால் இல்லை, முதலுதவி சிகிச்சை மட்டும் அளித்தேன். அன்றைய தினம் என் அலுவல் பணிக்கு உதவியாக செவிலியர்கள் இருப்பார்கள் என்றால் சரிதான். சம்பவ தினத்தன்று செவிலியர்கள் தான் சிகிச்சை அளித்தார்கள் என்றாலும், நான் பணி மருத்துவர் என்பதால் என்னிடம் கையெழுத்து மட்டும் வாங்கினார்கள் என்றால் சரியல்ல. காயம்பட்டவருக்கு இரண்டு காயங்கள் காணப்பட்டன. அதில் முதல் காயத்திற்கு நான் தையல் போட்டேனா என்றால் போட்டேன். காயம்பட்டவரை மேல்சிகிச்சைக்கு பரிந்துரை செய்த ஆவணங்களை காவல்துறையிடம் கொடுத்தேனா என்றால் இல்லை, விபத்து பதிவேட்டில் இணைத்துள்ளேன். சிதைந்த காயம் மற்றும் வெட்டுக்காயம் இரண்டும் வெவ்வேறு விதமான காயங்கள் என்றால் சரிதான். மேற்படி இரண்டு காயங்கள் ஏற்படுத்தும் ஆயுதங்கள் வேறுபடும் என்றால் சரிதான். வெட்டுக்காயம் என்பது கூர்மையான ஆயுதத்தால் வெட்டும்போது ஏற்பட வாய்ப்பு உண்டா என்றால் வாய்ப்பு உண்டு. சிதைந்த காயம் மழுங்கிய பகுதியை கொண்ட ஆயுதத்தால் தாக்கும்போது ஏற்பட வாய்ப்பு உண்டா என்றால் உண்டு. காயம்பட்டவரை நான் பார்வையிடும்போது சுயநினைவுடன் காணப்பட்டாரா என்றால் சுயநினைவுடன் தான் இருந்தார். டியூப் லைட் பட்டியினால் அடிக்கும்போதோ அல்லது மேலிருந்து கிழே விழும்போதோ மேற்படி சிதைந்த காயம் ஏற்பட வாய்ப்பு

உண்டா என்றால் வாய்ப்பு உண்டு. அருவாளை கொண்டு எலும்பின் மேற்பகுதியில் வெட்டும்போது சிதைந்த காயம் ஏற்பட வாய்ப்பு உண்டு என்றால் சரிதான். மெதுவான தசைப்பகுதியில் வெட்டும்போது வெட்டுக்காயம் ஏற்பட வாய்ப்பு உண்டு என்றால் சரிதான்.

ம.வி.இல்லை.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2025.11.07 17:00:59 +0530

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.